ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2035/4 - 2017 සැප්තැම්බර් මස 04 වැනි සඳුදා - 2017.09.04

2035/4 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 04 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.:3/7/5/32.

காணி அமைச்சின் குறிப்பு இல.:3/99/E/220.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:-**

மத்திய மாகாணத்தில் நுவரெலியா மாவட்டத்தில் வலப்பனை பிரதேச செயலகப் பிரிவின் ஒயப்பலாத்த கோரளை 515டி வதுமுல்ல கிராம அலுவலகப் பிரிவில் முல்ஹல்கெலெ தோட்டம், பேரப்பிட்டிய வயல், கல்லெனகாவ ஹெனவில் உள்ள (இறுதிக் கிராம வரைபட இலக்கம் 615) கிராமத்தின் இடப் பரப்பை நில அளவையாளர் அதிகாரியினால் தயாரிக்கப்பட்ட மூலவரைபட அளவீடுகளின் படி 0.2178, 0.3140 ஹெக்டயாருக்குறிய காணிப்பிரிவின் எல்லைகள்; பின்வரும் துண்டு இலக்கம் 61, 63 வரையில் காட்டப்பட்டுள்ளது.

**1. துண்டு இலக்கம் 61**

காணியின் பெயர்: முல்ஹல்கெலெ தோட்டம், பேரப்பிட்டிய வயல், கல்லெனகாவ ஹென; உரிமை கோருவோர்: கே. டி. தமரா நந்தணீ, கே. டி. பத்மா விஜெலதா மற்றும், எம். கருணாவதி; விபரம்: வீட்டுத் தோட்டம், 20-25 வருடகாலத்துக்கான பல்வகை யான விவசாயம் மற்றும் நிரந்தரக் கட்டிடங்குள் 2 உண்டு; விஸ்தீரணம்: 0.2178 ஹெக்டயார்.

**2. துண்டு இலக்கம் 63**

காணியின் பெயர்: முல்ஹல்கெலெ தோட்டம், பேரப்பிட்டிய வயல், கல்லெனகாவ ஹென; உரிமை கோருவோர்: டி. எம். திசாநாயக்க; விபரம்: வீட்டுத் தோட்டம், 20-25 வருடகாலத்துக்கான பல்வகை யான விவசாயம் மற்றும் மயானபூமியும் உண்டு; விஸ்தீரணம்: 0.3140 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதி

மு. ப. 10.00 மணிக்கு வலப்பனை பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 21 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஐ. எம்.சேனாநாயக்க,
பிரதேச செயலாளர்,
வலப்பனை.

பிரதேச செயலகம்,
வலப்பனை,
2017, ஓகத்து 10.
9 - 436